**M.C.O.P. No.100/2025**

**Deposition of P.W. 1**

**Dated : 5 .3.2026**

**Name :** திரு.அருள்பிரகாஷ்

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

2ம் எதிர்மனுதார்தரப்பு குறுக்கு விசாரணை,

சம்பவ தினத்தன்று ஈத்தாமொழி கோட்டார் சாலையில் வட்டக்கரையிலிருந்து இருளப்பப்புரத்திற்கு சென்று கொண்டிருந்தேன். சாலை தென் வடல் சாலைஆகும். சாலையின் தார் பகுதி சுமார் 40 முதல் 50 அடி இருக்கும். சாலையின் இருபுறமும் சுமார் 5 அடிக்கு மண் பகுதி உள்ளது. விபத்து தார் அல்லது மண் பகுதியில் நடந்தது என்றால் தார் பகுதியின் விளிம்பில் நடந்தது. சாலையின் இருபுறமும் நிறைய கட்டடிங்கள் உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ல் விபத்தானது தார்ப்பகுதியின் 5 அடிக்குள் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல உரிமம் உள்ளது. ம.சா.ஆ.5 ல் ஓட்டுநர் உரிமத்தை ஆஜர்படுத்தவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஓட்டுநர் உரிமத்தினை ஆஜர்படுத்தினேன் அவர்கள் தவறாக குறிப்பிட்டுள்ளார்கள். **(சாட்சி தன்னுடைய அசல் ஓட்டுநர் உரிமத்தை காண்பித்தார்**.) நான் ஓட்டி வந்த இருசக்கரவாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். கார் வாகனத்தின் முன் நடுப்பகுதி என்னுடைய வாகனத்தில் மோதியது. கார் வாகனமானது எதிர் திசையிலிருந்து வந்தது. கார் வாகனம் என் வாகனத்திலிருந்து எவ்வளவு தொலைவில் திரும்பினார் என்றால் தெரியாது. காரை வலதுபுறமாக திருப்பினார். கார் வாகனம்

திரும்பும்போது நேரடியாக மோதிவிட்டார். என்னுடைய வாகனத்தின் வலதுபுறம் நடுப்பகுதியில் சேதம் ஏற்பட்டது. ம.சா.ஆ.5 ல் இருசக்கர வாகனத்தின் கால் மிதிப்பு பகுதியில் சேதம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ன்படி வாகனத்தின் வலதுபுறம் இரண்டு சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். கார் வா கனம் மோதவில்லை என்றும் நான் தான் நிலைதடுமாறி கீழே விழுந்ததால் வாகனத்தின் வலதுபுறம் சேதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நேரான சாலை என்பதால் முன்பகுதி நன்றாக தெரியும். உடனடியாக என்னை கால்வின் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் சரிதான். விபத்தில் எனக்கு இரண்டு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். மருத்துவமனையில் சுமார் 6 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். ம.சா.ஆ.10 ன்படி 1,19,891 ரூபாய் என ரூபாய்க்கு கட்டணபில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.11 ன்படி அதே தொகையை கட்டியவுடன் ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ல் குறிப்பிட்ட தொகை ம.சா.ஆ.10 தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ல் குறிப்பிட்ட தொகை ம.சா.ஆ.10 ல் 6 வது தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் ம.சா.ஆ.8 மற்றும் 9 ல் குறிப்பிடப்பட்ட தொகைகள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கட்டட காண்ட்ராக்டராக பணியாற்றி வருகிறேன். அதுகுறித்த ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாதம் ரூ.50000 சம்பாதித்து வருவதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றும், நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது

என்றால் சரியல்ல. விபத்தானது என்னுடைய கவனக்குறைவாலும் ஏற்பட்டதால் இழப்பீடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. கோரியுள்ள வட்டி அதிகப்படியானது என்றால் சரியல்ல. குற்ற வழக்கானது தற்போது எந்த நிலையில் உள்ளது என்றால் தெரியாது.

**1ம் எதிர்மனுதார்தரப்பு குறுக்கு விசாரணை**

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.